| O.S.No. 64/2023 | PW1 : திரு. வெங்கடேசன்<br>த/பெ. திரு. கன்னியப்பன் | 24-06-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. சின்னக்கன்னு எனது தாத்தா. சின்னகன்னுவிற்கு கன்னியப்பன், ராஜவேல், சுப்பிரமணி, அண்ணாமலை ஆகியோர் மகன்கள் ஆவார்கள். எனது தந்தைதான் கன்னியப்பன். என்னுடன் பிறந்தவர்கள் என் அண்ணன் ராமமூர்த்தி, லலிதா, லட்சுமி ஆகியோர் அக்கா ஆவார்கள். ராஜவேலுக்கு 4 வாரிசுகள், அவர்கள் அனைவரும் சென்னையில் குடியேறிவிட்டார்கள். சுப்பிரமணிக்கு 1—ம் பிரதிவாதி உமாமகேஸ்வரி மட்டுமே வாரிசு ஆவார். அண்ணாமலைக்கு கருணாகரன், தசரதன், குமார், பெருமாள் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். எனது பாட்டி பெயர் கன்னம்மாள். சின்னகன்னு உயிரோடு இருக்கும்போது தாவா சொத்து குறித்து எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை.

2. நான் 3 ஏக்கர் 95 சென்ட்டிற்காக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் கன்னியப்பனின் வாரிசு என்ற அடிப்பபடையில் எனது பாட்டி கண்ணம்மாள் எனக்கு 1 ஏக்கர் 30 சென்ட்டினை தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்தார். அதேபோல் சுப்பிரமணியின் வாரிசான 1—ம் பிரதிவாதி உமாமகேஸ்வரிக்கு 1 ஏக்கர் 30 சென்ட்டினை தான செட்டில்மெண்ட பத்திரம் எனது பாட்டி எழுதி வைத்தார். அதேபோல், அண்ணாமலையின் வாரிசுகளான 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எனது பாட்டி 1 ஏக்கர் 30 சென்ட்டினை தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி வைத்தார். மேற்படி 3 தான செட்டில்மென்ட் பத்திரங்களும் ஒரே நாளில் ஏற்படுத்தப்பட்டது. அந்த செட்டில்மென்ட் ஆவணங்கள் 1997—ம் வருடம் எழுதப்பட்டது.

3. கிட்டத்தட்ட 28 வருடங்களாக செட்டில்மென்ட் ஆவணத்தின் முன்னிலைக்கு அவரவர் சொத்துக்களை அவரவர் அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். அவரவர்கள் அனுபவிக்கும் சொத்தைப்பொறுத்து எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னால் சரிதான். எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் நான் அனுபவித்து வரும் சொத்தினை 1-ம் பிரதிவாதி உமாமகேஸ்வரி அவரது கணவருக்கு 30 சென்ட்டினை எழுதிவைத்து விட்டதால் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தைப்பொருத்து பாகப்பிரிவினை மற்றும் நான் அனுபவித்து வரும் சொத்தினை 1 முதல் 5 பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேலும், மொத்த சொத்தினையும் பாகப்பிரிவினை செய்யவேண்டும் என்று வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான்.

4. எனக்கு வந்த சொத்தில் நான் 6 சதுரத்தில் சுமார் ரூ. 15 லட்சம் மதிப்பில் வீடு கட்டி அனுபவித்து வருகிறேன். எனக்கு பிரதிவாதிகள் விற்பனை செய்த சொத்தில் பாகம் கொடுத்தால் நானும் அனுபவித்து வரும் சொத்தினை பாகம் கொடுக்க தயாராக உள்ளேன். நான் அனுபவித்து வரும் சொத்தினை பாகப்பிரிவினை செய்து கொடுத்தாலே எனக்கு போதும். 1-ம் பிரதிவாதி அனுபவித்து வரும் சொத்தில் எனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை, அண்ணமலை மகன்கள் அனுபவித்து வரும் சொத்தினை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. 1-ம் பிரதிவாதி அவரது கணவருக்கு எழுதிக்கொடுத்த சொத்தைப்பொறுத்து மட்டுமே எனக்கு ஆட்சேபனை உள்ளது.

5. 1-ம் பிரதிவாதி உமாமகேஸ்வரியானவர் விஜயலட்சுமி, கனகா, கோவிந்தசாமி, கண்ணன் ஆகியோர்களுக்கு விற்பனை செய்தார், கண்ணன் கிரையம் வாங்கிய சொத்தினை கண்ணன் அனுபவிக்கவில்லை. 4-ம் பிரதிவாதி குமாரிடமிருந்து 7-ம் பிரதிவாதி கிருஷ்ணன், 11-ம் பிரதிவாதி ஆறுமுகம் ஆகியோர் கிரையம் வாங்கினர். அதேபோல் 3-ம் பிரதிவாதி தசரதனிடமிருந்து 12-ம் பிரதிவாதி சேட்டு ஆச்சாரி கிரையம் வாங்கியுள்ளார். குமார் மனைவி தேவியிடமிருந்து 13-ம் பிரதிவாதி சுரேஷ் கிரையம் வாங்கியுள்ளார். ஆக, 1-ம் பிரதிவாதி அவருக்கு வந்த சொத்தினையும், அண்ணாமலை வாரிசுகள் அவர்களுக்கு வந்த சொத்தினையும் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான்.

6. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால், 1-ம் பிரதிவாதிக்கு உரிமையான 26 சென்ட்டினை நான் அனுபவித்து வருகிறேன் என்றாலும், அதனை கேட்டதால்தான் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அண்ணாமலையின் வாரிசுகளான 2 முதல் 5 பிரதிவாதிகள் என்னிடம் சொத்திற்கு வழி கேட்டனர் என்றாலும், அந்த வழியானது 1-ம் பிரதிவாதிக்கு சொந்தமான 26 சென்ட்டில் வருகிறது என்பதாலும், அதனை நான் அனுபவித்து வருவதால் பிரதிவாதிகள் கேட்டதால் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. சட்டப்படி 1-ம் பிரதிவாதி உமாமகேஸ்வரிக்கு சொந்தமான 26 சென்ட்டினை நான் கொடுக்க கடமைப்பட்டவன் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகளை அளைக்கழிக்கவேண்டும் என்பதற்காக இந்த வழக்கினை தாக்கல்

செய்துள்ளேன் என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.06.24 12:38:23 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**